(2019) 5 எஸ்.சி.ஆர் 11

பவன் வாசுதேவ் சர்மா

–எதிர்–

மஹாராஷ்ரா மாநில அரசு அதன் செயலாளர் மூலம்

(குற்றவியல் மேல்முறையீடு எண் 519/2019)

2019 ஆம் ஆண்டு மார்ச் 25

(மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

மற்றும்

(மாண்புமிகு நீதியரசர் திரு. இந்து மல்ஹோத்ரா)

இந்திய தண்டனைச் சட்டம், 1860 – பிரிவுகள் 302 மற்றும் 392 – மும்பை காவல் சட்டம் – பிரிவு 37 (1) உடணிணைந்த பிரிவு 135 – ஆயுதங்கள் சட்டம் – பிரிவு 3 உடன் இணைந்த பிரிவு 25 – 1 மற்றும் 2 ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் உட்பட நான்கு நபர்கள் ஒரு சிறுவனை கடத்திச்சென்று பிணைய மீட்பு தொகை கோரினர் – காவல் துறை திடீர்ச் சோதனை நடத்தி, குற்றஞ்சாட்டப்பட்டவர் உட்பட நான்கு நபர்களை கைது செய்தனர் – மேல்முறையீட்டாளர்–1–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட சேதனையின்போது, ஒரு கைதுப்பாக்கி, உபயோகப்படுத்தப்படாத தோட்டா மற்றும் இரண்டு கைபேசிகள் கைப்பற்றப்பட்டன – 1–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கி

காவல் படை அதிகாரியான அ.சா.11 இடம் ஒப்படைக்கப்பட்ட பணிச்சார் ஆயுதமாகும், அது முன்னதாக வேறொரு சம்பவத்தின்போது அடையாளர் தெரியாத நபர்களால் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது – 1–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டாக்கள் அதே துப்பாக்கியுடையது என்று தடயவியல் ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது – வேறொரு சம்பவத்தில், இறந்த 'ஆ' வின் உடலில் இருந்து கைப்பற்றப்பட்ட தோட்டாவானது, தோட்டா உறையிலிருந்து வெளியேறிய துப்பாக்கி சூடு முள் அச்சுப் பதிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது – 'ஆ' வின் உடல் மீட்கப்பட்டபோது, அவரது இரண்டு கைபேசிக்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது – மேலும், கடத்தல் வழக்கில் பிணைய மீட்பு தொகை கோரி குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் செய்யப்பட்ட அழைப்பு இறந்த 'ஆ'யின் கைபேசியிலிருந்து செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது – 1 & 2–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் 'ஆ'ஐ கொலை செய்ததற்காகவும், இதச பிரிவு 302, 392 உடணிணைந்த பிரிவு 34, மும்பை காவல் சட்டம் பிரிவு 37(1) உடணிணைந்த பிரிவு 135 மற்றும் ஆயுதங்கள் சட்டம், பிரிவு 3 உடணிணைந்த பிரிவு 25 ஆகியவற்றுக்காக விசாரணைக்குட்படுத்தப்பட்டார் – விசாரணை நீதிமன்றம் 1 மற்றும் 2–ஆம்

குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானித்தது – உயர் நீதிமன்றம் இ.த.ச., பிரிவு 302, 392 ஆகியவற்றின் கீழ் 2–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தது – மேல்முறையீட்டாளர் – 1 ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மனக்குறையுள்ளதன்பேரில், மேல்முறையீட்டை தாக்கல் செய்தார் – முடிவு : சார்ந்திருக்கப்பட்ட சூழ்நிலைகள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தைத் தவிர ஒவ்வொரு புனைக் கருத்தையும் தள்ளுபடி செய்யவேண்டும் என்பது அறுதியிடப்பட்ட கோட்பாடாகும் – கைபேசி குறித்த முதல் சூழ்நிலை நிறுபிக்கப்படவில்லை – தொலைபேசி எண்ணானது, இறந்த 'ஆ'இன் பெயரில் அல்லாமல் 'எஸ்'இன் பெயரில் இருந்தது, அவர்களுக்கிடையே சம்பந்தமில்லை – இரண்டாவது சூழ்நிலை யாதெனில், இறந்தவரின் உடலிலிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டாக்கல் குறித்ததாகும் – 'பி' யின் உடலில் இருந்து மீட்கப்பட்ட தோட்டா, அ.சா–11–படைத்துறை அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட பணிச்சார் ஆயுதத்துடன் ஒத்துப்போவது உண்மை எனினும் ஆயுதம் குற்றவாளிகளால் பறிக்கப்பட்டதான கோட்பாடு நிரூபிக்கப்படவில்லை – குற்றஞ்சாட்டப்பட்டவரின் அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை – இரு சூழ்நிலைகளும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை – பல்வேறு இணைப்புகள்

காணப்படவில்லை, மேலும் பதிவாவணத்திலுள்ள சான்றாவணம் மனிதனின் குற்றத்தைத் தவிர ஒவ்வொரு கருதுகோளையும் நீக்காது – ஆகவே, மேல்முறையீட்டாளருக்கு சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டது – மேல்முறையீட்டாளர் – 1–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் அவருக்கு எதிரான சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

மேல்முறையீட்டை அனுமதித்த நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1. அரசு தரப்பு முக்கியமாக இரண்டு சூழ்நிலைகளை சார்ந்து உள்ளது. விடுவிப்புத் தொகை கோருவதற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மீட்கப்பட்ட கைபேசி மற்றும் கைப்பற்றப்பட்ட 9. MM துப்பாக்கி , முதலாவது சூழலில் கைபேசி குறித்து எதுவும் நிரூபிக்கப் படவில்லை. கைபேசி எண்ணுக்கு, இறந்தவரான "B" சந்தாதாரர் இல்லை. ஆனால் "S" சந்தாதாரர் ஆவார். இருவருக்குமிடையேயான தொடர்பு எதுவும் வெளிக் கொணரவில்லை. "B"–யின் பெயரில் எவ்வித ரசீதும் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. அரசு தரப்பின்படி "B"–யின் மேற்படி கைபேசி எண்ணிற்கு "B"–தான் சந்தாதாரர் என்று யூகித்துக் கொள்ள முடியாது. மேலும், எதிரியை "B"–யின் கொலையோடு இணைப்பதற்கு உண்டான விஷயங்கள் முழுவதுமாக எதுவும் காணப் படவில்லை. இரண்டாவது சூழல் குறித்து, இறந்தவரின்

உடலிலிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டா (அ.சா.11) போலீஸ் நாயக் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட துறை சார்ந்த ஆயுதத்துடன் ஒத்துப் போனாலும் அந்த ஆயுதமானது எதிரியால்தான் பறிக்கப்பட்டது என்னும் கூற்று போதுமானதாக வெளிக்கொணரப்படவில்லை. அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்படவில்லை. நடந்திருந்தாலும் அதற்கான சான்றுகள் எதுவும் ஆவணமாக ஆஜராக்கப்படவில்லை. எனவே இந்த சூழலும் எதிரிக்கு எதிராக போதுமான அளவு நிரூபணமாகவில்லை. (பத்தி 9 மற்றும் 15)

2. மேற்சொன்ன தீர்முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, காலத்தின் சோதனையாக நிலைத்திருக்கும் கோட்பாடுகளை பயன்படுத்தினால், இவ்விஷயம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதல்ல என்று நாங்கள் கருதுகிறோம். சார்ந்துள்ள சூழ்நிலைகள், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை தவிர மற்ற அனைது கருதுகோளையும் நிராகரிக்க வேண்டும். தற்போதைய வழக்கில் பெறும்பாலான விடுபட்ட தொடர் சூழ்நிலைகள் உள்ளன, எங்களது ஆழ்ந்த கருத்துப்படி, பதிவாவணத்திலுள்ள சான்றாவணம் ஒருவரின் குற்றத்தை தவிர தனி கருதுகோள்கள் அனைத்தையும் நீக்காது என்பதாகும். எனவே, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது, மேல்முறையீட்டாளர் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுகிறார். (பத்திகள் 17, 18)

ஷரத் பிர்திசந்த் சர்தா –எதிர்– மகாராஷ்டிரா மாநிலம் (1984) 4 எஸ்சிசி 116 : [1985] 1 எஸ்சிஆர் 88– சார்வுறப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவு</u>:

(1985) 1 எஸ்சிஆர் 88 ... சார்வுறப்பட்டது ... பத்தி 16

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 519/2019.

மும்பை உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீடு எண் 700/2013 இல் 24.03.2015 தேததியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

<u>வழக்குரைஞர்கள்</u> :

ரவி பிரகாஷ் மெஹ்ரோத்ரா,

திருமதி தீப்தி ஆர். மெஹ்ரோத்ரா,

அங்கித் அகர்வால் .... மேல்முறையீட்டாளருக்காக

அனூப் கந்தர்ட்,

நிஷாந்த் ராமகாந்தராவ் கட்னேஷ்வர்கர்

... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு.உதய் உமேஷ் லலித் அவர்களால் பிறப்பிக்கப்பட்டது

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. குற்றவியல் மேல்முறையீடு எண் 700/2013 ஐ தள்ளுபடி செய்து மும்பை உயர் நீதிமன்றத்தால் 24.03.2015 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றம் உத்தரவின் சரித்தன்மையை எதிர்த்து 1–ஆம் அசல் குற்றஞ்சாட்டப்பட்டவரால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

3. அரசுத் தரப்பு வழக்குப்படி, காவல் படை அதிகாரியின் (பின்னர் விசாரணையில் அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்டார்) கை துப்பாக்கியும் (பணிச் சார் ஆயுதம்) வாக்கி டாக்கியும், 20.12.2005 அன்று சுமார் 9.00 மணியளவில் மூன்று நபர்களால் திருடப்பட்டது. அந்த சம்பவம் தொடர்பாக 20.12.2005 அன்று மு.த.அ. தாக்கல் செய்யப்பட்டு, அந்த மு.த.அ., தற்போதைய வழக்கு நடவடிக்கைகளில் சான்றாவணம் 106 ஆக பதிவுறுவில் வைக்கப்பட்டன. மு.த.அ.–இல் எந்த நபரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை, எனினும் அது அனைத்து மூன்று நபர்களின் விவரத்தையும் அளித்துள்ளன. அவ்வழக்கு தனியாக விசாரிக்கப்பட்டது.

4. 04.01.2006 அன்று, மும்பை–புனே நெடுஞ்சாலையில் ஒரு மோட்டார் சைக்கிள் அருகே காயமுற்றந்த ஒருவர் படுத்துக் கிடப்பதாக அ.சா.1–காவல் துறை ஆய்வாளர் டபீருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அ.சா.1 சம்பவ இடத்திற்குச் சென்று காயமுற்றவரை மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்றார், அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டார். இறந்தவரின் கால்சட்டையில் இருந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உரிமத்தின் அடிப்படையில், அவர் பீமா வாக்மாரே என அடையாளம் காணப்பட்டார். அதன் பின்னர் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டு, மு.த.அ. , சான்றாவணம் 13 பதிவு செய்யப்பட்டது, அதற்கிணங்க, கு.ப. எண் 5/2006 ஆக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. விசாரணை தொடங்கி உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அ.சா.3, மருத்துவர் ஜோஷி பிரேத பரிசோதணையை நடத்தி, பின்வரும் வெளிப்புறக் காயங்களை கண்டறிந்தார்:–

"(1) மார்பக காம்பின் வலது பக்கத்தில், இடது பாலூட்டு சுரப்பியில் 13 செ.மீ கீழே அதன் உள்பகுதியில் சுடப்பட்ட காயம்.

2) இடது தொடையில் வலுவான ஆயுதத்தின் காரணமாக ஏற்பட்ட தீ காயம். இரண்டு வகையான. பின் இடுப்பெலும்பு பகுதியில் 9 செ.மீ.–க்கு கீழே 2 1⁄2 செ.மீ x 1 செ.மீ அளவிலான காயம். மேலோட்டமானது முதல் ஆழமானது. சிவப்பு மையத்துடன்கூடிய அடர்ந்த கருப்பு நிறம்.

(3) இடது பக்க இடுப்பெலும்புக்கு கீழே 9 செ.மீ.–க்கு சிராய்ப்பு மற்றும் முன்புற மேல்இலியாக் முதுகுத் தண்டுக்கு

பின்புறம் 8 செ.மீ. கீழே 5 செ.மீ. மற்றும் 2 ½ செ.மீ.–க்கு மேலோட்டமானது முதல் ஆழமானது வரை.

(4) கீழே காணப்படும் உடலில் உள்ள சிராய்ப்புகள்:

(அ) கையின் மூன்றாவது இடைநிலையின் முன்புறம்

(ஆ) முழங்கை பின்புறம்

(இ) மணிக்கட்டின் முன்புறம்

(ஈ) (அ) தொடை மூன்றாவது நடுப் பகுதி

(ஆ) முழங்கால் மூட்டு

மேலே சொல்லப்பட்ட அ.சா.3 டாக்டர். ஜோதி, மேலும் தொடர்புடைய உள் காயங்களை கண்டுள்ளார்:–

"வயிற்றுச் சுவரில் ஊடுருவும் காயம், பெரிட்டோனியம் கல்லீரலின் இடது மடலின் மேல்புறம் அதன் ஒரு பகுதியை உடைக்கிறது. கீழ்ப் பக்கத்தில் வெளியே வந்து கணையத்தில் நுழைந்து கணையத்தை உடைத்து, சிறுகுடலின் மெசென்டரியில் இருபுறங்களிலும் ஊடுருவியிருக்கிறது. விட்டம் ஒவ்வொன்றும் இரண்டு செ.மீ. இடது சிறுநீரகத்திற்கு பின்புற இடைநிலைக்கும், பெரிய ரெட்ரோ பெரிட்டோனியல் மற்றும் பெரிட்டோனியல் பகுதிக்கும் சென்றுள்ளது. இடுப்பு முதுகெலும்பு 4 மற்றும் 5–ஐ உள்தள்ளி உடலுடன் பொருத்தி, எல் 4 மற்றும் எல் 5–ன் இடது பக்கத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இடது

சாக்ரோலியாக் மூட்டில் இலியாக் க்ரெஸ்டைத் தாக்கி தசைகள் மற்றும் கொழுப்பு இடது பக்கமாக உட்பொதிக்கப்பட்டு, பக்க வாட்டாகவும், சிறப்பாகவும் இயக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய பக்கத்திலிருந்து தோட்டா மீட்கப்பட்டது. அதன் அடிப்பகுதியில் மஞ்சள் நிற உலோக குழிவு காணப்பட்டது."

5) அரசு தரப்பின்படி, பீமாவாஹ்மரே சுடப்பட்டபோது உபயோகிக்கப் பட்ட துப்பாக்கியானது அ.சா.11 காவலர் நாயக் நாகரேவிடமிருந்து திருடப் பட்டதாகும். கொலை நடந்த பின், பீமா வாஹ்மரேவிடமிருந்து அவருடைய இரண்டு கைபேசிகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றான கைபேசி எண். 9850520922 நோக்கியா கம்பெனியின் கைபேசி ஆகும். இந்த கைபேசி ஆகாஷ் லோகாண்டே என்ற சிறுவனை கடத்தியதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. சிறுவனின் தந்தை அ.சா.12 சஞ்சய் லோகாண்டேவிடம் பிணைத் தொகை கேட்டு, இந்த கை பேசி மூலம் அழைக்கப்பட்டிருக்கிறது. 13.1.2006 அன்று அந்த கடத்தலுக்காக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கானது தனியாக விசாரிக்கப்பட்டது.

6) கடத்தல் வழக்கை விசாரித்தபோது, ஆகாஷ் லோகாண்டேவை, விமான்நகர், பூனேவில் ஒரு கட்டிடத்தில் அடைத்து வைத்திருந்தது காவல் துறைக்கு தெரியவந்தது.

அதன்படி திடீர் சோதனை நடத்தப்பட்டு, போலீஸ் அந்த கட்டிடத்திற்கு சென்றபோது, அங்கு பவன் வாசுதியோ ஷர்மா (1–ஆம் எதிரி) பங்கஜ் ராம்கோபால் ஜஹுரியா (2–ஆம் எதிரி) வாசுதியோ ஷர்மா மற்றும் ராஜேந்திர கவுட் காணப்பட்டார். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

1–ஆம் எதிரியின் மீது தனிப்பட்ட சோதனையில் ஒரு 9MM துப்பாக்கி மற்றும் இரண்டு சுடப்படாத தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டது. இரண்டு கைபேசிகளும் அவரிடமிருந்து கண்டெடுக்கப்பட்டது. 2–ஆம் எதிரியை சோதனை செய்தபோது ஒரு வெட்டறிவாள் கண்டெடுக்கப்பட்டது. இவர்கள் நான்கு பேரும் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட துப்பாக்கி தடயவியல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. தடயவியல் ஆய்வாளர்கள் ஆய்வில், இறந்துபோன பீமா வாஹ்மரேயின் வயிற்றிலிருந்து மீட்கப்பட்ட தோட்டாவானது, அதே துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டதாகும் என கண்டறிந்தனர். 1–ஆம் எதிரியிடமிருந்து மீட்கப்பட்ட சுடப்படாத தோட்டாவும், தடயவியல் ஆய்வாளர்களால் அதே துப்பாக்கியால் சோதனை துப்பாக்கி சூடு நடத்தி அதன் பொதியுறை மீது துப்பாக்கி சூட்டின் முன் பதிவின் அம்சங்களும் இறந்துபோன பீமா வாஹ்மரேவின் உடலிலிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டாவின் அம்சமும் ஒன்றுதான் என்று கண்டறியப்பட்டது .

கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் அ.சா.11 காவலர் நாயக் நாகரே முன் அடையாளம் காட்டுவதற்காக நிறுத்திவைத்து, 1–ஆம் எதிரி மற்றும் 2–ஆம் எதிரி ஆகிய இருவரும் அவரால் அடையாளம் காணப்பட்டனர். ஆயினும் அடையாள அணிவகுப்பு நடத்தியதற்கான எவ்வித சான்று ஆவணங்களும் தற்போதைய விசாரணையில் தாக்கல் செய்யப்படவில்லை.

7) விசாரணை முடிவடைந்தபின் 1–ஆம் எதிரி மற்றும் 2–ஆம் எதிரி ஆகிய இருவர் மீதும் பீடா வாஹ்மரேவை கொலை செய்த குற்றத்திற்காக இ.த.ச., பிரிவு 302, 392 உடணிணைந்த பிரிவு 34, பம்பாய் போலீஸ் சட்டம், பிரிவு 37(1) உடணிணைந்த பிரிவு 135 மற்றும் இந்திய ஆயுதங்கள் சட்டம், பிரிவு 3 உடணிணைந்த பிரிவு 25 ஆகியவற்றின் கீழ் விசாரிக்கப்பட்டனர்.

8) அ.சா.2 சீமா, மரணமுற்ற பீமா வாஹ்மரேயின் மனைவி, அவரது வாக்குமூலத்தில் தனது கணவருக்கு இரண்டு கைபேசிகள் உண்டு என்றும், அதில் ஒன்று 9850520922 என்றும் கூறியுள்ளார். அவர் தன்னுடைய முதல் அறிக்கையில் தன்னுடைய கணவருக்கு தொழில் ரீதியாக விரோதிகள் உண்டு என்று கூறியுள்ளார். அ.சா.5 சச்சின் மகாதேவ் ஷிண்டே, ஐடியா செல்லுலர் கம்பெனியின் நோடல் அதிகாரி, 9850520922 என்ற எண்ணுடைய கைபேசியானது, சாய் பிரசாத் புட்ஸ் லிமிடெட், டெல்கோ ரோடு, முதல் தளம், ராகா கேஸ் கம்பெனி அருகில்,

சின்ச்வாட் நிலையம், புனே– 411 019 என்ற விலாசத்திலுள்ள சஞ்சய் எஸ்.ராய் என்பவரால் வாங்கப்பட்டது என்று கூறினார். அவர் சான்று ஆவணம் மூலமாக ஜனவரி 2006 மற்றும் பிப்ரவரி 2006 மாதங்களில் சந்தாதாரரின் தொடர் அழைப்புகள் குறித்த தேவையான விவரங்களின் பதிவுகளை தயாரித்து கொடுத்துள்ளார். அ.சா.6 மூத்த காவல் ஆய்வாளர், பாண்டுரங் உதவ்ராவ் கோஹிம்கர் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தன்னுடைய வாக்குமூலத்தில், அ.சா.11 காவலர் நாயக் நகாரே, 1–ஆம் எதிரி மற்றும் 2–ஆம் எதிரி ஆகிய இருவரின் அடையாளம் தொடர்பாக அடையாள அணிவகுப்பு குறித்து ஏதுவும் கூறவோ அல்லது அது தொடர்பான பதிவுகள் தாக்கல் செய்யவோ இல்லை. அ.சா.12 சஞ்சய் லோகாண்டே, ஆகாஷ் லோகாண்டோ என்பவரின் தந்தை கைபேசி எண்.9850520922 என்ற கைபேசியிலிருந்து தன்னிடம் பிணையத் தொகை கேட்டதாக கூறியிருந்தார். அவர் தன்னுடைய சாட்சியத்தின் போது தன்னிடம் பிணையத் தொகை கேட்டவன், பேச்சுவாக்கில் தாங்கள் கர்ஜாத்தில் ஒருவரை கொலை செய்ததாக கூறினான் என்று கூறியுள்ளார்.

9) மேல்முறையீட்டாளர்–1–ஆம் எதிரியிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட துப்பாக்கி, ஒரு பணிசார் ஆயுதமாக அ.சா.11 காவலர் நாயக் நகாரேவிடம் ஒப்படைக்கப்பட்டு, அது 20.12.2005 அன்று அவரிடமிருந்து பறிக்கப்பட்டது என்பது அரசுத் தரப்பு

வழக்காகும். இந்த துப்பாக்கியை கொண்டுதான், பீமா வஹ்மாரே என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த வழக்கிற்கு நேரடி சாட்சியமாக எந்தவொரு கண்ணுற்ற சாட்சியமும் இருந்ததாக ஆவணங்களும் இல்லை மற்றும் அரசு தரப்பானது இந்த வழக்கில் சூழ்நிலை சான்றுகளை சார்ந்துள்ளது என்பதாகும். இந்த வழக்கில் சூழ்நிலை சான்றுகள் இரண்டு அம்சங்களின் அடிப்படையிலானது.

(அ) கைப்பற்றப்பட்ட அலைபேசி பிணையத் தொகை கேட்டதற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

(ஆ) மேலே கூறியபடி கைப்பற்றப்பட்ட 9 mm துப்பாக்கி.

(10) இந்த இரண்டு சூழ்நிலைகளைத் தவிர, அ.சா.12 சஞ்சய் லோகாண்டேவிடம் தொலைபேசி மூலமாக பிணையத் தொகை கேட்டவர்கள் அளித்த நீதித்துறை சாரா ஒப்புதலுரை மீது சார்வுறப்பட்டது. இந்த இரண்டு சூழ்நிலைகளும் எதையும் சுட்டிக் காட்டாவிடினும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளின் குற்றத்தை கருத்தில் கொண்டு, கூடுதல் அமர்வு நீதிபதி, புனே, 11.01.2011 அன்று தன்னுடைய தீர்ப்பில் 1–ஆம் எதிரி மற்றும் 2–ஆம் எதிரி ஆகிய இருவரையும் இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகளான 302, 392 உடணிணைந்த பிரிவு 34 மற்றும் பம்பாய் காவல் சட்டம் பிரிவு 37(1) உடணிணைந்த பிரிவு 135 மற்றும் இந்திய ஆயுத சட்டம் பிரிவு 3 உடணிணைந்த 25 ஆகியவற்றின் கீழான

தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக அவர்களுக்கு முதலாம் குற்ற எண்ணிக்கையின் கீழ் ஆயுள் சிறைத் தண்டனையும், இரண்டாம் குற்ற எண்ணிக்கையின் கீழ் இரண்டாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும், மூன்றாம் குற்ற எண்ணிக்கையின் கீழ் 15 நாள் கடுங்காவல் சிறைத் தண்டனையையும், நான்காவது குற்ற எண்ணிக்கையின் கீழ் ஆறுமாத கடுங்காவல் சிறைத் தண்டனையையும் விதித்தார்.

11) தண்டிக்கப்பட்ட இரண்டு எதிரிகளும் தாங்கள் குற்றவாளிகள் என்று தீர்மானித்து சிறைத் தண்டனை அளித்து உத்தரவிட்டதற்கு எதிராக குற்ற மேல்முறையீடு எண்700/2013 மற்றும் குற்ற மேல்முறையீடு எண்1056/ 2013 ஆகிய இரண்டு மேல்முறையீடுகளை முன்கொணர்ந்தனர். 1–ஆம் எதிரியை பொறுத்தவரையில், அவர் பீமா வாக்மரேவின் கொலை குற்றத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரம் உள்ளது என்பதை அரசுத் தரப்பு தனது வழக்கில் நிறுவியுள்ளது என உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. ஆயினும், 2–ஆம் எதிரி குற்றத்தில் தொடர்புடையவர் என்பதற்கான சான்றேதுமில்லை என்று கண்டறிந்த உயர் நீதிமன்றம், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302, 392 மற்றும் இந்திய ஆயுதங்கள் சட்டம், பிரிவு 3 உடணிணைந்த பிரிவு 25 கீழான குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவித்தபோதிலும் பம்பாய் காவல் சட்டம், பிரிவு 37(1)

உடணிணைந்த பிரிவு 135 ஆகியவற்றின் கீழான குற்றத்தை பொறுத்தவரையில் அவரது குற்றம் மற்றும் தண்டனைத் தீர்ப்பை நிலைநிறுத்தியது.

12) 2–ஆம் எதிரியின் விடுதலையை மாநில அரசு எதிர்க்காததால் அது இறுதி நிலையை அடைந்துள்ளது என்பது பதிவிலுள்ளது.

13) மேலே விவரிக்கப்பட்ட சங்கதிகள் பின்வரும் அம்சங்களை கொண்டுள்ளது :–

(அ) முதல் தகவல் அறிக்கையிலுள்ள சான்றாவணம் 106 ன்படி, அ.சா.11 காவலர் நாயக் நகாரேயின் பணிச்சார் ஆயுதத்தை கொள்ளையடித்தது மூன்று நபர்கள் என்றும், முதல் தகவல் அறிக்கையின் சான்றாவணம் 106 இல் அனைத்து மூன்று நபர்களின் விவரங்கள் அளிக்கப்பட்டபோதிலும், எந்தவித அடையாள அணிவகுப்பும் நடத்தப்படவில்லை என்றும், கடத்தல் வழக்கை விசாரித்தபோது சந்தேகத்திற்குரிய நான்கு நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அது தொடர்பாக எந்த சான்றாவணமும் பதிவுறுவில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மூன்றாவது நபர் யார் என்பதை குறித்து எந்தவித தெளிவான ஆதாரமும் இல்லை என்பதாகும்.

(ஆ) அ.சா.11. காவலர் நாயக் நகாரேவின் கூற்றுப்படி, மூன்று நபர்களால் தாக்கப்பட்டதன் காரணமான சிறிது நேரம் அவர் சுய நினைவை இழந்து விட்டார் என்றும், மீண்டும் சுயநினைவு வந்தபிறகு அவர் தன்னுடைய கைபேசியின் மூலம் 100–ஐ தொடர்பு கொண்டு, தன்னுடைய பணிச் சார் ஆயுதம் மற்றும் வாக்கி டாக்கி காணாமல்போனதை குறித்து தகவல் தெரிவித்தார் என்பதும் ஆகும். அவரது பணிச் சார் ஆயுதம் மற்றும் வாக்கி டாக்கியை கொள்ளையடித்த நபர்கள் அவரது கைபேசியை அப்படியே விட்டுவிட்டு சென்றனர் என்பது சற்று முரண்பாடானதாக இருந்தது.

(இ) அ.சா.2 சீமா–இன் கூற்றுப்படி, தன்னுடைய கணவர் பீமா வாஹ்மாரே கைபேசி எண்.9850520522 இன் பயனாளராவார். மறுப்புறத்தில், அரசு தரப்பில் அ.சா.5 சச்சின் மஹாதேவ் ஷிண்டேயின் சாட்சியத்தின் அடிப்படையில் கைபேசி எண்.9850520922 ன் பயனாளி சஞ்சய் எஸ்.ராய் என்று கூறப்பட்டுள்ள. மேலும் அரசு தரப்பானது மேற்சொன்ன சஞ்சய் எஸ். ராய் என்பவருக்கும், பீமா வாஹ்மரேக்கும் என்பவருக்கும் இடையேயான தொடர்பு என்ன என்பதையும், மேற்சொன்ன சஞ்சய் எஸ்.ராய்

எப்போதாவது தன்னுடைய கைபேசியை பீமா வாஹ்மரேவுக்கு கொடுத்தாரா என்பதையும் நிறுவ தவறியுள்ளது.

(ஈ) அ.சா.2 சீமா தனது அசல் கூற்றில், தனது கணவருக்கு தொழற்போட்டிகள் உள்ளன என்ற சந்தேகத்தை வெளிப்படுத்தினார்.

(உ) பிணையத் தொகையை கேட்டவர்களில் ஒருவர் கர்ஜாத்தில் தாங்கள் ஒருவரை கொலை செய்தோம் என்று உறுதிக்கூறியது அ.சா.12 சஞ்சய் லோகாண்டேவின் முதல் விசாரணையில் வெளிப்படவில்லை, எனினும் அது குறுக்கு விசாரணையில் வெளிப்பட்டது. எனவே, அ.சா.12 சஞ்சய் லோகாண்டேவிடம் நீதித்துறைச்சாரா ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் அளிக்கப்படவில்லை என்பது அரசுத் தரப்பின் குறிப்பிட்ட வழக்கல்ல.

(ஊ) இந்த வழக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணங்களைக் கொண்டுள்ளது. முதன்மை குற்றச்சாட்டு தொடர்பாக 2–ஆம் எதிரிக்கு விடுதலை உத்தரவிடப்பட்டபோதிலும், பம்பாய் காவல் சட்டம், பிரிவு 37(1) உடணிணைந்த பிரிவு 135 இன் கீழான குற்றங்களுக்கான தண்டனை உத்தரவை உயர்

நீதிமன்றம் நிலைநிறுத்தியது. எனவே, அ.சா.11 காவலர் நாயக் நகாரேவிட மிருந்து அவருடைய பணிச்சார் ஆயுதத்தை பறித்த குற்றத்திற்காகவும் 2 ஆம் எதிரி தண்டிக்கப்படவேண்டுமே தவிர கொலைக்காக அல்ல என்ற நிலைப்பாட்டுடன் நாங்கள் வழக்கை மேல்நடத்துகிறோம்.

(எ) பணிச்சார் ஆயுதம் பறிக்கப்பட்டதற்கும், கொலைக்கும் இடை 15 நாள் இடைவெளி இருந்திருக்கிறது.

14) 2 ஆம் எதிரி முதன்மை குற்றச்சாட்டான பிரிவு 302 ன் கீழ் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக, 1 ஆம் எதிரி மட்டுமே இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 302–ன் கீழ் குற்றவாளியாவார் என்பதை பதிவாவணத்திலுள்ள சான்றாவணங்கள் போதிய அளவில் நிறுவியுள்ளனவா என்பதை நாம் கண்டறிவதற்கு கோரப்பட்டுள்ளோம்.

15) அரசுத் தரப்பு சார்ந்து நின்ற முதன்மையான இரு சூழ்நிலைகள் இதில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. கைபேசி தொடர்புடைய முதல் சூழ்நிலை நிரூபிக்கப்படவில்லை. அந்த கைப்பேசியின் பயனாளி மரணமுற்ற பீமா வாஹ்மரே அல்ல, ஆனால் சஞ்சய் எஸ். ராய் என்பவரே அதன் பயனாளி ஆவார். இவ்விரு நபர்களுக்கு இடையேயான தொடர்பு குறித்து

நிரூபிக்கப்படவோ அல்லது பதிவுறுவில் பீமா வாஹ்மரேவின் பெயரின் ரசீதும் தாக்கல் செய்யப்படவோ இல்லை. மேற்சொன்ன சஞ்சய் எஸ். ராய் என்பவரின் பெயரில்தான் கைபேசி எண் வாங்கப்பட்டது என்று அரசுத் தரப்பு சாட்சியம் அளித்துள்ளதால், மெய்யாகவே, மேற்சொன்ன கைபேசி எண் பீமா வாஹ்மரேவால் வாங்கப்பட்டது என கருதமுடியாது. மரணமுற்ற பீமா வாஹ்மரே மற்றும் எதிரிக்கும் இடையேயான தொடர்பு என்ன என்பது முற்றிலும் காணப்படவில்லை. இரண்டாவது சூழ்நிலையை பொருத்தவரையில், மரணமுற்றவரின் உடலிலிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டா அ.சா.11 காவல் நாயக் நகாரேவுக்கு ஒதுக்கப்பட்ட பணிச்சார் ஆயுதத்துடன் ஒத்துப்போகிறது என்பது உண்மையாக இருந்தாலும், எதிரியால்தான் ஆயுதம் பறிக்கப்பட்டது என்ற கோட்பாடு போதிய அளவு நிறுவப்படவில்லை. எந்தவித அடையாள அணிவகுப்பும் நடத்தப்படவில்லை என்றும், நடத்தப்பட்டிருந்தாலும் அது தொடர்பான எந்த சான்றாவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாகும். எனவே, இரண்டாம் சூழ்நிலை, என்பது எதிரிக்கு எதிராக போதுமான அளவு நிறுவப்படவில்லை.

16) சூழ்நிலை சான்றுகளின் அடிப்படையில் வழக்குகளை மதிப்பீடு செய்வதில் சட்டம் தெளிவாக உள்ளது. நீதிமன்றம் சூரத்

பிரித்திசந்த் சர்தா – எதிர் – மஹாராஷ்டிரா மாநிலம் (1984) 4 எஸ்சிசி 116 வழக்கில் கீழ்க்கண்டவாறு வகுத்துரைத்துள்ளது :–

"153. இந்த தீர்முடிவை கூர்ந்து ஆராய்ந்தால், எதிரிக்கு எதிரான வழக்கை முழுமையாக நிறுவுவதற்கு முன்பு பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வெளிப்படுகிறது .

(1) எந்த சூழ்நிலையில் குற்றம் தீர்மானிக்கப்பட்டது என்பதை முழுமையாக நிறுவவேண்டும்.

நீதிமன்றமானது சம்மந்தப்பட்ட சூழ்நிலைகளை "கட்டாயம் வேண்டும் அல்லது வேண்டும்" என்பதையும் "இருக்கலாம்" என்பதையும் நிறுவப்பட வேண்டும் என்று இங்கே குறிப்பிடலாம். "நிரூபிக்கப்படலாம்" மற்றும் "நிரூபிக்கப்படவேண்டும்" அல்லது நிரூபிக்கப்பட வேண்டும் என்பது குறித்து இலக்கணத்திலும், சட்டத்திலும் வேறுபாடு உண்டு என்பதை நீதிமன்றமானது சிவாஜி சாகிப்ராவ் போபடே– எதிர் – மஹாராஷ்டிரா மாநிலம் (1973 2 எஸ்சிசி 793; 1973 எஸ்சிசி (கு) 1033; 1973 குற்ற. லா.ஜெ. 1783) என்ற வழக்கில் கீழ்க்கண்ட கருத்துரைகளை அளித்துள்ளது. (எஸ்.சி.சி. பாரா 19, பக்கம் 807, எஸ்.சி.சி. (குற்றம்) பக்கம் 1047).

"உறுதியாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் தண்டிக்கப்படுவதற்கு முன்பு அவர் குற்றவாளியாக இருக்க வேண்டும் மற்றும் குற்றவாளியாக இருக்கலாம் என்று மட்டுமே இருக்கக்கூடாது என்பது முதன்மை கோட்பாடு, மேலும் 'இருக்கலாம்' மற்றும் 'இருக்கவேண்டும்' ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளி நெடியது மற்றும் உறுதியான முடிவுகளிலிருந்து தெளிவற்ற ஊகங்களினால் பிரிக்கப்படுகிறது ."

ஆ) அவ்வாறு நிறுவப்பட்ட சங்கதிகள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்திற்கான புனைக் கருத்துடன் மட்டுமே ஒத்துபோகவேண்டும், அதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தைத் தவிர அது வேறொரு புனைக் கருத்துடனும் ஒத்துப் போகாதிருக்க வேண்டும்.

(3) சூழ்நிலைகள் உறுதியான தன்மை மற்றும் இயல்பை கொண்டதாக இருத்தல்வேண்டும்.

(4) அவை நிரூபிக்கப்பட வேண்டிய கருதுகோளைத் தவிர மற்ற கருது கோள்களை விட்டுவிட வேண்டும்.

(5) குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றமற்றவர் என்று இறுதியில் ஒத்துப்போவதற்கான எந்த நியாயமான காரணங்களையும் விட்டுவிடாதபடி சாட்சியங்களின் சங்சிலித் தொடர்

சூழ்நிலைகள் முழுமையாக இருத்தல்வேண்டும், மேலும் அனைத்து மனித சாத்தியக்கூறின்படியும் அச்செயல் குற்றஞ்சாட்டப்பட்டவரால் புரியப்பட்டிருக்கவேண்டும்."

(154) இந்த ஐந்து பொன்னான கோட்பாடுகளும், நாங்கள் கூறியபடி, சூழ்நிலை சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு வழக்கை நிரூபிப்பதற்கான பஞ்சசீலை கொள்கைகளாக அமைக்கிறது."

17) மேற்சொன்ன தீர்முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, காலத்தின் சோதனையாக நிலைத்திருக்கும் கோட்பாடுகளை பயன்படுத்தினால், இவ்விஷயம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதல்ல என்று நாங்கள் கருதுகிறோம். சார்ந்துள்ள சூழ்நிலைகள், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை தவிர மற்ற அனைது கருதுகோளையும் நிராகரிக்க வேண்டும். தற்போதைய வழக்கில் பெறும்பாலான விடுபட்ட தொடர் சூழ்நிலைகள் உள்ளன, எங்களது ஆழ்ந்த கருத்துப்படி, பதிவாவணத்திலுள்ள சான்றாவணம் ஒருவரின் குற்றத்தை தவிர தனி கருதுகோள்கள் அனைத்தையும் நீக்காது என்பதாகும்.

18) ஆகவே, நாங்கள் மேல்முறையீட்டாளருக்கு சந்தேகத்தின் பலனை வழங்குகிறோம். எனவே, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது, மேல்முறையீட்டாளர் அவர்

மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுகிறார். வேறு ஏதேனும் குற்றம் தொடர்பாக அவரது முன்னிலை தேவைப்பட்டாலன்றி, அவர் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."